Registered as a Newspaper in Sri Lanka

# ஐக்கிய தீபம்

தேசிய கூட்டுறவுச் சபையின் (யாழ் மாவட்டக் குழு) வெளியீடு

மலர் : 30
இதழ் : 12

ஆவணி
1975

## இந்த இதழில்....


- ஆசிரியர் தலையங்கம்
- துண்டாடப்பட்ட காணிகளை ஒன்றுக்குதல்
- பெண்களும் கூட்டுறவும்
- இலங்கைக் கூட்டுறவு இயக்கம் : தோற்றுவாயும் வளர்ச்சியும்
- கூட்டுறவு முறையில் [illegible]மை
- தென்கிழக்காசியாவில் மகளிர் கூட்டுறவுச் செயற்பாடுகள்

# ஐக்கியதீபம்

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

மலர் 30 ‖ யாழ்ப்பாணம், ஆவணி 1975 ‖ இதழ் 12

## காணிச் சீர்திருத்தமும் விளைவாக்கமும்

உலகு எங்கும் விவசாயிகள் பண்படுத்தும் நிலம் பிரச்சினையாகவே இருந்து வருகின்றது.

உழைப்பாளிக்கே காணி என்ற சுலோகத்தினை மாக்சிய வாதிகள் எழுப்பினர். இச்சுலோகம் சில அடிப்படையான பிரச்சினைகளைச் சார்ந்ததாய் இருந்தது.

இன்று ஏறக்குறைய எல்லா நாடுகளிலும் காணிச் சீர்திருத்தம் நடைபெற வேண்டும் என்பதனைப் பொதுவாக எல்லோரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

ஆரம்பத்திலே காணி எல்லோருக்கும் பொதுச் சொத்தாக இருந்தது. ஆனால், படிப்படியாக வலிமையுள்ள சில தனியாட்கள் தமது ஆதிக்கத்தைச் செலுத்தி காணிகளை தமதாக்கிக் கொண்டனர். இதன் விளைவாக ஒரு சிலருக்கே காணிகள் சொந்தமாகி மற்றவர்கள் அவர்களுக்கு வேலையாட்களாக மாற வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வரலாற்றுப் பின்னணி எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். இதனை நாம் இங்கு நினைவு கூருவதன் நோக்கம் யாதெனில் அண்மையிலே இலங்கையில் காணிச் சீர்திருத்தங்கள் நடைபெற்றுள்ளமையே.

பல நாடுகளிலே காணிச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதே போன்று இலங்கையிலும் ஒருவர் தனதாக வைத்திருக்கக்கூடிய காணி எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கையின் மூலம் நிலமற்றிருந்த இலட்சக் கணக்கான விவசாயிகள் நன்மை பெற்றுள்ளனர் என்பதனை மறுக்க முடியாது.

எல்லோரும் சமம் என்ற கொள்கைக்கு ஏற்பவும், சுரண்

டல் ஒழிக்கப்படல் வேண்டும் என்பதற்காகவும், இந் நடவடிக்கைகள் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தகைய நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கவை. ஆயினும் சமூகநீதி நிலை நாட்டப்படுவது எத்துணை வரவேற்புள்ளதாயினும், விளைவாக்கம் குன்றாது பார்த்துக் கொள்ளல் எமது முதற்பணியாகும்.

ஒரு தொழில் தேசியமயமாக்கப்பட்டால் அது நிச்சயமாக நட்டத்தைத்தான் கொடுக்கும் என்று பெரும்பாலோர் சிந்திக்கும் இவ்வேளையில் காணிச் சீர்திருத்த சட்டங்களும் இவ்வாறே உற்பத்தியைக் குறைக்கும் என சிலர் — குறிப்பாக முதலாளித்துவ வர்க்கத்தினைச் சார்ந்தவர்கள் — சுட்டிக்காட்டியுள்ளனர். பொதுச் சொத்து எவரது சொத்துமல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆயினும் பொது நலனையும், தனியார் நலனையும் இணைப்பதற்குவழியுண்டு.

சமூக உடைமைக் கொள்கையில் நம்பிக்கையுடைய நாடுகளிலே நிலம் பொதுச் சொத்தாகப் பிரகடனப்படுத்தப்பட்டு விவசாயிகள் கூட்டுப்பண்ணைகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இந்நோக்கம் எவ்வளவு மேலான போதிலும் விளைவுகள் அவ்வளவு திருப்தியாக இல்லை. இதனாற்றான் இந்நாடுகள் அமெரிக்கா போன்ற இடங்களிலிருந்து உணவுத் தானியங்களை இறக்குமதி செய்யவேண்டியிருக்கின்றது. இதே வேளையில் சுதந்திர நாடுகள் என வர்ணிக்கப்படும் அமெரிக்கா போன்ற நாடுகளில் விளைச்சல் அமோகமாய் இருப்பதற்குக் காரணம் தனிச் சொத்துரிமை என கூறப்படுகின்றது.

தனிச் சொத்துரிமையா அல்லது பொதுவுடமையா அனுகூலமானது என்பதனை இங்கு நாம் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. சமூக நீதியின் பேரில்—இதனை எவரும் மறுத்துரைக்க முடியாது, அரசாங்கம் இப்பொழுது காணிகளைக் காணியற்றோருக்குப் பிரித்துக் கொடுத்திருக்கின்றது. வரவேற்கத்தக்க இம்முயற்சி வெற்றி பெறவேண்டுமாயின் கூட்டுறவு இயக்கம் தனது முழுச்சக்தியையும் திரட்டி கூட்டுறவுப் பண்ணைகள் மூலம் விளைவாக்கத்தைப் பெருக்கி இந்நடவடிக்கையினை வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

# துண்டாடப்பட்ட காணிகளை ஒன்றாக்குதல்

## உணவு, விவசாய நிறுவனத்தின் அனுபவம்

—ஹான்ஸ் மெலிங்செக்

உலகு எங்கும் பல்வேறு வளர்ச்சிக் கட்டங்களிலும், பல்வேறு அரசியல் அமைப்புக்களிலும் விவசாயக் காணிகள் துண்டாடப்படுவதினால் ஏற்படும் தீய விளைவுகளைத் தவிர்க்கும் பொருட்டு காணிகளை ஒன்றாக்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வளர்ச்சியுற்று வரும் நாடுகளிலும்சரி, வளர்ச்சியுற்ற நாடுகளிலும்சரி துண்டாடப்பட்ட காணிகளினால் விவசாய அபிவிருத்தி தடைப்பட்டு வருகின்றது. முக்கியமாக நவீன பயிர்ச்செய்கை முறைகளையும் திருப்திகரமான நீர்ப்பாசன வடிகால் அமைப்புக்களையும் அறிமுகப்படுத்த முடியாமல் இருக்கின்றது.

காணிகளை ஒன்றாக்கும் துறையில் உணவு விவசாய நிறுவனம் 1950லிருந்தே ஆர்வம் காட்டத் தொடங்கியது. அன்றிலிருந்து துண்டாடப்பட்ட நிலங்களை ஒன்றாக்குவது பற்றியும், நிலவுடமை அமைப்பைப் பற்றியும் நடைமுறை ஆய்வுக்குழுக்களின் அமர்வுகளை இந் நிறுவனம் நடாத்தி வந்துள்ளது. துண்டாடப்பட்ட காணிகளை ஒன்றாக்குவது பற்றி தொழில் நுட்ப அறிவை இந்நிறுவனம் அளித்து வந்துள்ளதுடன் இப்பொருள்பற்றி உணவு விவசாய பிரதேச, தேசிய நிலையங்களில் கருத்தரங்குகளும் கலந்துரையாடல்களும் நடைபெறுவதற்கு தூண்டுகோலாய் இருந்துள்ளது. இக்கூட்டங்களைத் தொடர்ந்து உணவு விவசாய நிறுவனம் துண்டாடப்பட்ட காணிகளை ஒன்றாக்குவது பற்றி 13 அறிக்கைகளை வெளியிட்டதுடன், 5 நாடுகள் பற்றி தனி நூல்களையும் வெளியிட்டது. இப்பல்வேறு ஆவணங்களை இக் கட்டுரையில் சுருக்கித்தர நான் விழைகின்றேன். இதன் மூலம் பல்வேறு நாடுகளிலே கடைப்பிடிக்கப்படும் அணுகு முறைகளைச் சுட்டிக்காட்டி இவற்றின் நோக்கு, கோணங்கள், விளைவுகள், பாதிப்புகள் ஆகியவற்றை மதிப்பிடலாம்.

சராசரி ஒவ்வொரு ஏக்கரிலும், சராசரி ஒவ்வொருவரினதும் விளைவாக்கத்தை உயர்த்துவதே துண்டாடப்பட்ட காணிகளை ஒன்றாக்குவதன் நோக்கமாகும். உண்மையிலே விளைவாக்கத்திலும் உற்பத்தியிலும் இத்தகைய திட்டங்கள் மூலம் குறிப்பிடத்தக்க பெருக்கம் நடைபெற்

றுள்ளது. அதுவும் நீர்ப்பாசனத் திட்டத்துடன் இவை இணைக்கப்பட்டிருக்குங்கால்.

மேற்கு ஐரோப்பாவிலே விவசாயக் காணிகளிலிருந்து மக்கள் நகரங்களுக்குக் குடிபெயரத் தலைப்பட்டதனால் விவசாயத்தினை இயந்திர மயமாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதன் விளைவாக காணிகளை ஒன்றுக்குதல் அவசியமாயிற்று. இப்பகுதிகளிலே வேலை நேரத்தையும், தொழிலாளர் தொகையையும் குறைப்பதன் மூலம் விளைவாக்கத்தை உயர்த்துவதே இதன்முக்கிய நோக்கமாய் இருந்தது. விவசாயத் தொழிலாளருக்குச் செலுத்தவேண்டிய கட்டணங்கள் உயர்ந்துகொண்டு செல்வதனால் இது புரியக்கூடியதே. ஆயினும் வளர்ச்சியுற்று வரும் நாடுகளிலே வேலை நேரத்தையும், தொழிலாளர் தொகையையும் குறைப்பதனால் கட்டாயமாக விளைவுகள் அதிகரிக்கும் என்று சொல்வதற்கில்லை. எனவே, நிலத்தைத் திருத்துவதன்மூலமும், நீரை மேலும் செம்மையான முறையில் பயன்படுத்துவதன்மூலமும் விளைவுகளை உயர்த்துவதில் முதல் கவனம் செலுத்தப்படுகின்றது. கிராமிய கீழ் அமைப்புக்களையும் விவசாய அபிவிருத்தியையும் முழு மொத்தமாகத் திட்டமிடுதலுக்கு காணிகளை ஒன்றுக்குந் திட்டம் வாய்ப்பளிப்பதனால் அவை மேலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

ஆழமாக வேரூன்றியிருக்கும் பழக்கவழக்கங்களையும் மரபுகளையும் இத்திட்டங்கள் பாதிப்பதனால் அவை மிக முக்கியமான சமூக விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. காணிகள் துண்டாடப்பட்டிருப்பதனால் ஏற்படும் பிரதிகூலங்களை விவசாயிகள் உணர்ந்திருந்தபோதிலும் காணிகளை ஒன்றுக்கும் திட்டத்திற்கு அடிக்கடி வெறுப்புணர்ச்சி காட்டுகின்றனர். தமது மூதாதையரும், தாமும் பரம்பரை பரம்பரையாகப் பயிர் செய்து வந்த காணித்துண்டு தமது அயலவரின் நிலத்திலும் செம்மையாகப் பேணப்பட்டு வருகின்றது என விவசாயிகள் நம்ப முற்படுகின்றனர். ஆகவே தமது சொத்தைக் கைமாற்றுவதற்குத் தயங்குகின்றனர். எனவே, காணிகளை ஒன்றுக்கும் திட்டங்களின் ஆரம்ப கட்டங்களில் இம்மனப்பான்மையை மாற்றி இதில் பங்குபெறவிருப்பவரின் நம்பிக்கையைப் பெறுவதே மிகக் கடினமான பணியாக இருக்கின்றது. பல நாடுகளிலே விவசாயிகளின் மனதை மாற்றுவதற்கு விவசாயிகளின் நிறுவனங்களே முக்கிய பங்கு எடுத்துள்ளன. நடைமுறையிலே இத்தகைய திட்டங்களின் அனுகூலங்களை ஆதாரபூர்வமாக நிறுவுவதற்கு வழிகாட்டுத் திட்டங்கள் பெரிதும் உதவுகின்றன. முக்கியத்துவம் வாய்ந்த காணி ஒன்றுக்கும் திட்டம் ஏதேனும் செம்மையான சட்ட ஏற்பாட்டை அடித்தளமாகக் கொண்டிருத்தல் வேண்டும். சம்பந்தப்பட்டவர்களின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்கும், நிறைவேற்றுத்துறையினருக்கு வேண்டிய அதிகாரங்களை அளிப்பதற்கும் இத்தகைய சட்ட அடித்தளம் இன்றியமையாதது. இத்தகைய சட்ட மூலத்தின் முக்கிய தேவைகளாவன:

(அ) பழைய நிலைமையிலிருந்து புதிய நிலைமைக்கு சொத்துரிமைகளை மாற்றுவதைக் கட்டுப்படுத்துதல்.

(ஆ) காணிகளை ஒன்றுக்கும்போது ஒவ்வொரு காணிச் சொந்தக்காரருக்கும் இருக்கும் உரிமைகளையும் அவர் எவ்வாறு இவ்வுரிமைகளைப் பெறுவதற்கு நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்யலாம் என்பதைப் பதிவு செய்தல்.

(இ) தமக்குரிய சொத்துரிமைகளின் அடிப்படையில் காணிச் சொந்தக்காரர் காணிகளுக்கு வேண்டிய திருத்த வேலைகள் செயற்படுத்தப்படுவதைத் தடுக்காது உறுதிப்படுத்துதல்.

சம்பந்தப்பட்டவர்கள் சுறுசுறுப்பாக ஒன்றுக்குதல் பணிகளில் ஈடுபடவேண்டிய அவசியத்தினை பல நாட்டுச் சட்ட மூலங்கள் வலியுறுத்துகின்றன. விவசாயிகளின் தன்முனைப்பிற்கு அதிக அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. ஆயினும், சில அரசாங்கங்கள் பொது நலத்தினைக் கருத்திற்கொண்டு ஒன்றுக்குதல் திட்டங்களை வலுக்கட்டாயமாகக் கடைப்பிடிக்கின்றன. இவ்விரு வாய்ப்பாடுகளுக்குமிடையில் சம்பந்தப்பட்டவர்கள்மீது எந்தளவு வலுக்கட்டாயம் பயன்படுத்தப்படவேண்டும் என்பது குறித்து பல்வேறு அணுகுமுறைகள் இருப்பதை நாம் அவதானிக்கலாம். நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்களினது ஆலோசனையின் பேரிலேயே எவ்வாறு ஒன்றுக்குதல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்ற வழிகாட்டுக் கோடுகள் வகுக்கப்பட்டதும்—இது நாட்டிற்கேற்ப வீத அளவில் வேறுபடும்—அவை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகள் அவற்றிற்கு ஒப்புதல் அளித்ததும் இந்நடைமுறை எல்லோரையும் கட்டுப்படுத்தும் வகையில் பல்வேறு ஒன்றுக்குதல் திட்டங்களில் ஏற்பாடு உண்டு.

துண்டாடப்பட்ட காணிகளை தன் விருப்பார்ந்த முறையிலா அல்லது வலுக்கட்டாய் முறையிலா ஒன்றுக்கப்படல் வேண்டும் என்ற பிரச்சினை அடிப்படையானது. ஒரு நரட்டின் அரசியலமைப்பு, பொருளாதார, சமூக வரலாற்றுப் பின்னணி விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் ஆகிய காரணிகளே இதுபற்றிய முடிவைப் பெரிதும் பாதிக்கின்றன. கடந்த இருபது ஆண்டுகளில் பெறப்பட்ட அனுபவத்திலிருந்து சம்பந்தப்பட்ட தனியாட்களுக்கிடையே ஏற்படும் இணக்கத்தின் மூலம் காணிகளை ஒன்றுக்குதல் திட்டம் போதியளவு வளர்ச்சியடைய முடியாதென்பது புலனாகியுள்ளது. நிலவுடைமை அமைப்பிற்கு வேண்டிய திருத்தத்தினைச் செய்வதற்கு ஓரளவு வலுக்கட்டாயம் தேவைப்படுகின்றது.

(வளரும்)

# பெண்களும் கூட்டுறவும்

திருமதி M. D. குறூஸ்

இவ்வாண்டை அனைத்துலக பெண்கள் ஆண்டாக ஐ. நா. சபை பிரகடனம் செய்துள்ளது. இவ்வாண்டின் நோக்கங்கள் பெண்களுக்குச் சமத்துவம் அளிப்பதும் முழு அபிவிருத்தி முயற்சிகளுடன் பெண்களை இணைப்பதன் மூலம் அபிவிருத்தியையும் சமாதானத்தை வளர்த்தலும். அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனம் மலேசியாவில் கூட்டுறவுச் சமாசத்தின் உதவியுடன் இவ்வாண்டு ஜூலை மாதத்தில் ஒரு பிரதேச மகாநாட்டை நடாத்தியது. இம்மகாநாட்டில் கூட்டுறவு அபிவிருத்தியில் பெண்களின் பங்கு பற்றி ஆராயப்பட்டது.

உலகத்தின் குடி மக்கள் தொகையில் பெண்கள் சரி அரைவாசியாகும். இவர்களை தேசிய அபிவிருத்தி முயற்சிகளுடன் இணைக்காவிட்டால் அவர்கள் தொடர்ந்தும் தனிமையில் வாழ்ந்து அபிவிருத்திக்கும், சமாதானத்திற்கும் தங்கள் பெறுமதியான பங்களிப்பைச் செலுத்தமுடியாது என்று உணரப் பலர் தலைப்பட்டுள்ளனர். பெண்களுக்கெதிராகக் காட்டப்படும் பாகுபாட்டினை ஒழிக்க வேண்டுமென எங்கும் அரசாங்கங்களும், மக்களும் உணரத் தொடங்கிவிட்டனர். ஒரு புதிய உலகை உருவாக்குவதற்கு ஆண்களுடன் பெண்களுக்கும் சமதையான நிலை உருவாக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் அளிக்கப்படவேண்டும்.

அனைத்துலக பெண்கள் ஆண்டின் நோக்கங்கள் கூட்டுறவு இயக்கத்தின் நோக்கங்களை ஒத்தவை. குடியாட்சிப் பாங்கான தன்னுதவி முயற்சிகளின் மூலம் உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதே கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.



முதலாவது கூட்டுறவுக் கொள்கை யாதெனில் தன் விருப்பார்ந்த தடையற்ற உறுப்புரிமை என்பதேயாகும். இதன் மூலம் எவ்வித பாகுபாடுமின்றி உறுப்பினர்கள் அத்தனைபேரும் தாம் விரும்பிய படி சேரக்கூடிய வாய்ப்புக்களை அளிப்பதே இதன் நோக்கமாகும். ஏனைய கூட்டுறவுக் கொள்கைகளும் எல்லா உறுப்பினர்களினதும் சம உரிமைகளை ஆதரிப்பதன் மூலம் குடியாட்சிப்பான முகாமையைப் பாதுகாக்கின்றன. இவ்வாறான ஏற்பாடுகள் எவ்வாறாக இருப்பினும் பொதுவாக பெண்கள் கூட்டுறவுத்துறைக்கு அப்பாலே இருந்தனர். ஆண்களே தொடர்ந்தும் இவ்வியக்கத்தினை ஆக்கிரமித்து வந்தனர். இப்பிரதேசத்தைப் பொறுத்தவரை விவசாய, நுகர்வு, கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களிலே பெண்களின் பங்கு மனதில் பதியத்தக்கதாகும்.

சமீப ஆண்டுகளில் சூழ்நிலை மாற்றமடையத் தொடங்கி, கூட்டுறவுச் சங்கங்களில் ஆர்வமுள்ளவர்களாகப் பெண்களின் தொகை அதிகரித்து வருகின்றது. இதற்கு முக்கிய காரணம் யாதெனில் பாரிய பிரச்சினைகளை, குறிப்பாக நடுத்தர, குறைந்த வருமானமுடையோரிடையே ஏற்படுத்திய பணவீக்கமாகும். விலை உயர்வு, உணவில் கலப்படம் இவற்றுடன் தொடர்பான பிரச்சினைக்களுக்கெதிராக சீரான வாழ்வு வாழ முடியாததால் குடும்பத்தலைவிகள் இத்தகைய பிரச்சினைகளைத் தணிப்பதற்கு பாவனையாளர் சங்கங்களை நாடினர். குடும்பத்தின் வருவாயினைப் பெருக்க வேண்டிய அவசியம் இருந்ததால் சிறிய சேமிப்பிற்கு ஊக்கமளித்து தேவையான காலத்தில் உதவியளிக்கும் கைத்தொழிற் சங்கங்களும், சிக்கன கடனுதவு சங்கங்களும் பெண்களைக் கவர்ந்தன. இதைத்தவிர பெண்கள் கூட்டுறவு இயக்கத்தில் எவ்வகையிலும் சேரவில்லை. இப்பிரநேசத்திலுள்ள கூட்டுறவு இயக்கங்கள் தமது பணிகளில் பெண்களைச் சேர்த்தால் கூட்டுறவு அபிவிருத்திக்கு அவர்கள் மிகவும் செயலூக்கமுடன் உழைப்பார்கள் என்ட:தால் எவ்வாறு அவர்களை அதிகமாகச் சேர்க்கலாம் என்பது அவற்றின் ஆய்வுக்குரியதாய் இருக்கின்றது. இது பல்வேறு நாடுகளின் பிரதே

சத்திலுள்ள பெண்களின் இப்போதைய நிலை குறித்து திட்ட மிடுதலையும், செயற் திட்டத்தினைப் பேணுவதையும் தவிர்க்க முடியாததாக்குகின்றது. உதாரணமாக எழுத்தறிவும் கல்வியும், சமூக வழக்கங்கள், பெண்களைக் கவரும் தொழில்கள், அவர்களுடையதிறமையும் பயிற்சியும் முதலியன. செயற்திட்டங்களுக்கு நிதி, தொழில் நுட்பம், விசேட அலுவலர், பொருத்தமான கல்விச் சாதனங்கள் இவைபோன்ற தேவைகள் உதவியாக இருக்கவேண்டும். பெண்களுக்குக் கூட்டுறவுக் கல்வி என்னும் விசேட செயற்திட்டத்தின் நோக்கு அவர்கள் உறுப்பினர்களாகவும், நிருவாக உறுப்பினர்களாகவும், முகாமைக் குழுவினராகவும், கூட்டுறவு ஊழியர்களாகவும் ஆவதற்கு இயக்கத்தின் எல்லா மட்டங்களிலும் அத்தியாவசிய அறிவினையும் பயிற்சியினையும் முன்னேற்பாடாக அளிப்பதாக இருக்கவேண்டும்.

மனதிலே பதிக்கத்தக்க ஒருவிடயம் என்னவெனில் குடும்ப அமைப்பிற்கும் கூட்டுறவிற்கும் உள்ள தொடர்பினைப் பெண்கள் அடிக்கடி முழுமையாக உணர்வதில்லை. உணவூட்டம், குழந்தை பேணல், குடும்ப வரவு செலவுத் திட்டம், சேமிப்பு போன்ற குடும்பம் சம்பந்தமான விடயங்களை கூட்டுறவுடன் நெருங்கிய தொடர்புடையவையாக விரிவாக விளக்குவதன் மூலம் கூட்டுறவினை அவர்கள் வீடுகளிலே பேணக்கூடியதாய் இருக்கும்.

பெண்களைக் கூட்டுறவு இயக்கத்தில் சேர்த்து அறிவூட்டிப் பயிற்சியளிப்பதன் மூலம் ஆங்காங்கு ஆண்களுடன் சகல கூட்டுறவு முயற்சித் துறைகளிலும் அவர்கள் சமபங்கு பெறும் பொறுப்பினை அளித்தல் கூட்டுறவு நிறுவனங்களினுடைய விசேடமாக தேசீய ரீதியலமைந்த நிறுவனங்களின் கடமையாகும். சில நாடுகளில் பிராந்திய கூட்டுறவு இயக்கங்கள் இவ்வழிமுறைகளைச் சிந்தைக் கெடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

''கூட்டுறவு அபிவிருத்தியில் பெண்களின் பங்கு'' என்னும் பிரதேச மகாநாடு தென் கிழக்காசியாவிலுள்ள பல்வேறு நாடுகளிலிருந்தும் வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகளை ஒன்று சேர்க்கும்.

(தொடர்ச்சி 12 பக்கம்)

(முற்றொடர்)

# இலங்கைக் கூட்டுறவு இயக்கம்: தோற்றுவாயும் வளர்ச்சியும்

(G. குருகுலசூரியா யாத்த நூலைத்தழுவி எழுதப்பட்டது)

**மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதமுடைய கடனுதவு சங்கங்கள்**

நகரங்களிலும், நகரப் புறங்களிலும் நிறுவப்பட்ட மேற்படி சங்கங்கள் அவைகளுடைய பங்களிப்பு குறுகியதாய் இருக்கின்ற போதிலும் மெதுவாக, ஆனால் அதேசமயம் உறுதியான முன்னேற்றத்தை அடைந்து வந்தன. 1946ல் 116 சங்கங்கள் இருந்தன. 1957ம் ஆண்டு இறுதியில் சங்கங்களின் தொகை 162. இச்சங்கங்களின் மொத்த உறுப்பினர் தொகையில் அரைவாசியும், மொத்தப் பங்கு முதலில் 3/5 பகுதியும் 5 சங்கங்களைச் சார்ந்து இருந்தன. இந்த 5 சங்கங்களிலும் உறுப்பினர்களாய் இருந்தவர்கள் அரசாங்க ஊழியர்களே. இவர்களில் பெரும்பாலோர் கொழும்பில் வேலைபார்த்து வந்தனர். விபரம் வருமாறு:

| சங்கத்தின் பெயர் | உறுப்பினர் தொகை | முதல் (லட்சக் கணக்கில்) |
|---|---|---|
| கொழும்பு நகரத்திலுள்ள திணைக்களங்களின் சங்கங்கள் | | |
| (அ) பொலீஸ் வங்கி | 3530 | 2.4 |
| (ஆ) அரசாங்க சிற்றூழியர்கள் | 1408 | 5.6 |
| (இ) சிறைச்சாலைத் திணைக்களம் | 1172 | 3.8 |
| (ஈ) அரசாங்க அழுத்தகம் | 933 | 6.7 |
| (உ) நில அளவையாளர் திணைக்களம் | 418 | 2.4 |
| மொத்தம் | 7461 | 20.9 |
| வேறு எல்லாச் சங்கங்கள் | 7563 | 14.4 |
| மொத்தத்தொகை | 15024 | 35.3 |

### மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதமுடைய கடனுதவு சங்கங்கள்

போர்க்காலத்திலே கடனுதவு சங்கங்கள் ஓரளவு புறக்கணிக்கப்பட்டிருந்தன. ஆனால், பின்னர் அவை வேகமாக முன்னேறத் தொடங்கின. 1945 ல் சங்கங்களின் தொகை 1696. 1957 ல் இத்தொகை 3581 ஆக உயர்ந்தது. கிராமப்புறங்களிலே இச்சங்கங்கள்தான் கட்டுப்பாடு மிக்க சங்கங்களின் மையமாக விளங்கின. விவசாய உற்பத்தி விற்பனவுச் சங்கங்களும் இப்பகுதிகளிலே நிறுவப்பட்டு குறைந்த வீத வட்டியில் பெருந்தொகைக் கடன்களை வழங்கிவந்தபோதிலும் கடனுதவு சங்கங்கள் இவ்வாறு முன்னணியில் நின்றமை குறிப்பிடத்தக்கது.

இச்சங்கங்கள் கூட்டுறவு உச்ச வங்கிக்கு கடனாளிகளாக இருக்கவில்லை. 1957ம் ஆண்டு இறுதியில் இச்சங்கங்கள் அரசாங்கத்திற்கு 1000 ரூபா மட்டுமே திருப்பிக் கொடுக்க வேண்டியிருந்தது. மாகாண வங்கிகளுக்கு அவை திருப்பிக் கொடுக்கவேண்டிய மொத்தக் கடன்கள் 36 லட்சமாக இருந்தபோதிலும் இச்சங்கங்களின் மொத்த பங்கு முதலில் இக்கடன் தொகை 31·5 வீதமே. தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் சிறியனவாக இருந்த போதிலும் இச்சங்கங்கள் வழங்கிய மொத்தக் கடன் தொகை ரூ. 92 லட்சமாகும். சராசரி கடன் அளவு ரூ. 132/-. சராசரி ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்கப்பட்ட கடன் ரூ. 79/-. இலங்கை முழுவதையும் எடுத்துக்கொண்டால் பிற்காலத்திலே வழங்கப்பட்ட கடன்களில் 64 வீதம் விவசாயக் கடன்களே. எனினும், 1957 ல் பொலநறுவையிலும் யாழ்ப்பாணத்திலும் வழங்கப்பட்ட விவசாயக் கடன் வீதங்கள் முறையே 88. 8, 83·3.

### சிக்கனச் சங்கங்கள்

1948 ஏப்ரல் மாதத்தில் சிக்கனச் சங்கங்களின் தொகை 228. 1957 ம் ஆண்டு இறுதியில் இத்தொகை 404 ஆக உயர்ந்தது. இக்கூட்டுறவுச் சிக்கனச் சங்கங்களில் பெரும்பாலானவை மாதர் சங்கங்களே. எனினும் இவற்றுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை அரசாங்க ஊழியர் சங்கங்களே.

தாம் செலுத்திய பணங்களைத் திருப்பிப் பெறுவ



தில் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கவேண்டுமென 1954 ல் தகவுரை செய்யப்பட்டது. இத்தகைய தடை நீக்கம் மூலம் தமது சேமப்பணங்களை ஈடுவைத்து கடன் பெறுவதற்குப் பதிலாக உறுப்பினர்கள் தாம் செலுத்திய பணத்தொகையிலிருந்து கடன் பெறும் பொருட்டே இத்தகவுரை செய்யப்பட்டது. கூட்டுறவுத் திணைக்கள சிக்கனச் சங்கமும், கொழும்பிலிருந்த வேறு இரு சங்கங்களும் இந்நடைமுறையினை மேற்கொண்டன. ஆனாலும் பெரும்பாலான சங்கங்கள் ஆரம்பத்திலே இம்மாற்றத்தினை வரவேற்கவில்லை.

### கூட்டுறவுச் சிக்கனச் சங்கங்கள்

*(30-4-48 க்கும் 31-12-57 க்கும் இருந்த வரையில்)*

| வகை | சங்கங்களின் தொகை | | உறுப்பினர் தொகை | | மொத்த சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|
| | 1948 | 1957 | 1948 | 1957 | 1948 | 1957 |
| மாதர் சங்கங்கள் | 111 | 211 | 3769 | 6664 | 155·2 | 224·0 |
| அரசாங்க ஊழியர் | 53 | 109 | 13,798 | 51,579 | 2,362·1 | 8,617.6 |
| விதானையார் சங்கங்கள் | 36 | 45 | 1326 | 1600 | 170·8 | 545·1 |
| தோட்டத் தொழிலாளர் | 4 | 8 | 294 | 499 | 18·2 | 101·5 |
| ஏனைய சிக்கனச் சங்கங்கள் | 29 | 31 | 2,121 | 6349 | 154·6 | 1,171·7 |
| மொத்தம் | 228 | 404 | 21,308 | 6,66,91 | 2,800·9 | 10,659·9 |

அரசாங்க ஊழியர்களிலேயுள்ள சங்கங்கள் பல கட்டுப்படியானவையாக இருந்ததினால் பெரிய சங்கங்களை தனித்தனி பிரிவுகளாகப் பிரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பெரிய சங்கங்களின் நடைமுறைக் கஷ்டங்களில் ஒன்று சங்க வேலைகளைக் கவனிப்பதற்கு வேண்டிய உத்தியோகத்தர்களைத் தேடிப்பிடிப்பதே. 1954 ல் அரசாங்க திறைச்சேரி இச்சங்கங்களின் பொருளாளர்களுக்கு இவ்வேலைகளைக் கவனிப்பதற்காக மாதத்தில் 1,2 நாட்களை கடமை ஓய்வாக அங்கீகரித்தது.

1957 அளவில் பொதுச் சேவையாளரைப் பொறுத்த வரையில் அவர்களுடைய உறுப்பினர் தொகை 50 ஆயிரத்திற்கு மேற்பட்டிருந்தது. இத்தகைய சங்கங்களின் முழு உறுப்பினர் தொகையில் இவர்களுடைய வீதம் 77·3

சிக்கனச் சங்கங்கள் பொதுவாக ஆண்டிற்கு ஆறுவீத வட்டியில் உறுப்பினர்களின் சேமிப்பில் 75 வீதத்தினை கடனாக வழங்கி வந்தன. 1957ல் கடனாக வழங்கப்பட்ட தொகை ரூ. 266 லட்சம். இவற்றில் 80 வீதம் பொது அரசாங்கச் சேவையாளருக்குக் கடன்களாக வழங்கப்பட்டன.

ஒவ்வொரு வகைச் சங்கத்தைப் பொறுத்த வரையிலும், ஒவ்வொரு உறுப்பினரதும் சராசரிச் சேமிப்பு வேறுபட்டது. 1957ல் மேல் மொத்தமான சராசரி ரூ. 160. ஆயினும் விதானையார் சங்கங்களின் சராசரி சேமிப்பு ரூ. 341/–

கொழும்பிலிருந்த 44 சங்கங்களில் 35 குழு ஆயுள் காப்புறுதித் திட்டங்களை மேற்கொண்டிருந்தன.

(வளரும்)

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுறவு அபிவிருத்திக்குப் பெண்களினது பங்களிப்பும், பெண்களது சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்கும் பங்கும் பல்வேறு கோணங்களில் கலந்துரையாடப்படும். இக் கலந்துரையாடலின் அடிப்படையில் நாடுகளிலே பிரதேசங்களில் தேசிய மட்டத்தில் பெண்களும் கூட்டுறவும் என்ற துறையில் எதிர்கால நடைமுறைக்கென திடமான திட்டம் தீட்டப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கூட்டுறவு முறையில் மேலாண்மை

B. விஜயராகவன் ஐ.ஏ.எஸ் :

கூட்டுறவுக் கடன் நிருவாகம் என்பது விரிவானதொரு பொருள். இதில் பல்வேறு அம்சங்கள் அடங்கியுள்ளன. முக்கியமானதும் உடனடியாக நமக்கு அவசியமானதுமான இதன் சில நிலைகளைப் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

கூட்டுறவுக் கடனின் தன்மை எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டும்? கூட்டுறவு லேவாதேவி நிறுவனங்களில் வங்கி முறை எவ்வாறு செயற்பட வேண்டும்? கூட்டுறவுக் கடன் துறையில் வியாபார வங்கியின் தலையீடு எம்மாதிரி இருந்து வரலாம்? இந்தத் துறையில் பதிவாளரின் பங்கு என்ன? என்பவற்றைப் பற்றிக் கூட்டுறவுக் கடன் நிருவாகம் சம்பந்தமாக சிந்தனை செய்வது பொருத்தமாகும்.

## கூட்டுறவுக் கடன் வசதி

இந்தியக் கூட்டுறவியக்கத்தில் கடன் வசதியானது குறிப்பாக விவசாயத்துறையில், கடந்த இருபது ஆண்டுகளாக சிறப்பிடம் பெற்றுள்ளது. 1951–52ம் ஆண்டில் ரிசர்வ் வங்கியால் நியமிக்கப்பட்ட அனைத்திந்திய கிராமக்கடன் விசாரணைக் குழுவினர் நடத்திய ஆராய்ச்சியில், இந்திய விவசாயிகள் பெற்றிருந்த மொத்தக் கடனில் 9·27 சத விகிதத் தொகையானது நிறுவன ரீதியல்லாத முறைகளால் கொடுக்கப்பட்டிருந்தது என்பது தெரியவந்தது. இதில் கடன் லேவாதேவியைத் தொழிலாகக்கொண்டவர்கள் 44·8 சத விகிதத் தொகையையும், விவசாயக் கடன் லேவாதேவிக்காரர்கள் 29·9 சத விகிதத் தொகையையும் வழங்கியிருந்தார்கள். நிறுவன அளவில் விவசாயிகள் பெற்றிருந்த கடன் அவர்களின் மொத்தத் தேவையில் 7·3 சத விகிதமாக இருந்தது. இதில் அரசாங்கத்தின் பங்கு 3·3 சத விகிதம், கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கியது 3·1 சத விகிதம், வியாபார வங்கிகள் கொடுத்தது 0·9 சத விகிதம் ஆகும். 1951–52ம் ஆண்டில் நிலவிய விவசாயிகளின் ஆண்டுக் கடன் தேவையான ரூ.750 கோடியில் கூட்டுறவுகள் வழங்கியிருந்த இந்த 3·1 சத விகித அளவானது. 1961–62ல் விவசாயிகளின் ஆண்டுக் கடன் தேவை நில

வரமான ரூ. 1·034 கோடியில் 16 சத விகிதமாகவும் 1967–68ல் 20 சத விகிதமாகவும் படிப்படியாக அதிகரித்து வந்தது. கடைசியாக எடுக்கப்பட்ட கணக்கின் படி சுமார் 50 சத விகிதத் தொகையை நிறுவன ரீதியாக வழங்கியிருந்தன என்றும், விவசாயிகளின் மொத்தக் கடன் தேவையில் மூன்றில் ஒரு பங்கை அனைத்திந்திய அளவில் கூட்டுறவு நிறுவனங்கள் வழங்கியிருந்தன என்பதும் தெரிய வந்தது. தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில், முதலாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் விவசாயக்கூட்டுறவுச்சங்கங்கள் ரூ. 5 கோடி அளவுக்கு கடன் வழங்கியிருந்தன. இரண்டாவது திட்டகாலத்தில் இது ரூ. 25 கோடியாக உயர்ந்து, மூன்றாவது திட்டக்காலத்தில் ஆண்டொன்றுக்கு ரூ. 30·34 கோடியாகப் பெருகியது. 1973–74ம் ஆண்டில் விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் ரூ. 78·34 கோடியைக் குறுகிய, மதிதிய காலக் கடன்களாக வழங்கின; நிலவள வங்கிகள் ரூ.20·60 கோடி நீண்டகாலக்கடன்களை வழங்கின. ஆக ரூ. 100 கோடி வரையில் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ் நாட்டில் விவசாயக் கடன்களை வழங்கியிருந்தன.

கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட்ட கடன் அளவைப்பொறுத்து நமது நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருந்தாலும் அக்கடனின் பலனைப் பொறுத்து (Quality) சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டதாகக் கூறமுடியாது. கடனைப் பயன்படுத்தும் முறையில் கூட்டுறவு நிறுவனங்கள் போதிய கவனம் செலுத்தவில்லை. கடன் தொகைகள் அதிகரித்தஅளவுக்கு, வழங்கிய கடன்கள் வகையாகப் பயன் பெற்றனவா என்பது குறித்து கூட்டுறவுச் சங்கங்கள் போதியகவனம் கொள்ளவில்லை. அத்துடன் மேல் மட்டத்திலுள்ள கடன் நிறுவனங்களும் பயன்மிக்க வகையில் மேற்பார்வையைச் செய்து கடன்கள் தவறாக உபயோகிக்கப் பெறுவதை தவிர்க்கத் தகுந்த நடவடிக்கையினை மேற்கொள்ளவில்லை. ஆனால், கடந்த சுமார் 10 ஆண்டுகளாக நமது மாநிலத்தில் பயிர்க் கடன் அமுல் செய்யப்பட்டதிலிருந்து கடனின் நிருவாக முறையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனலாம்.



வேளாண்மை செய்யும் பயிரையும் பருவ காலத்தையும் பொறுத்து கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வழங்கி பயிர் அறுவடைச் சமயத்தில் மகசூல் விற்பனையிலிருந்து கடனை வசூலிப்பதால் இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

வரும் ஆண்டுகளில் கடனின் தராதரம் மேலும் சிறந்து விளங்க உரிய நடவடிக்கைகளைக் கூட்டுறவுத் துறையில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். முதலாவதாக, விவசாயத்துக்கு முக்கியமாகத் தேவையான இடு பொருட்கள் (Inputs) வழங்கும் விஷயமாக வேண்டிய அளவுக்குக் கடன்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் அளிக்க முன்வர வேண்டும். நமது மாநிலத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உர வினியோக முறை மிக நல்ல வெற்றி கண்டுள்ளது. அதே போல பூச்சி மருந்து, விதைகள் ஆகியவற்றின் வினியோகம் பற்றியும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இரண்டாவதாக, வழங்கும் கடனின் வசூலை மகசூல் விற்பனையோடு இணைத்து விடவேண்டும். மூன்றாவதாக, மத்திய வங்கிகளின் மேற்பார்வையாளர்களுக்கு விவசாய விரிவாக்கப்பணி பற்றிய பயிற்சியும் வழங்கப்படவேண்டும். அதனால் விவசாய லேவாதேவி சம்பந்தமான விஷயங்களுடன் நல் விவசாய முறை பற்றிய ஆலோசனைகளை விவசாயிகளுக்கு அவர்கள் வழங்கி வழிகாட்ட முடியும். கடன் வழங்குதல் சம்பந்தமான கொள்கைகளை முடிவு செய்வதில் மத்திய வங்கியின் நிருவாகிகளுக்கு உதவ தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற அதிகாரிகள் தொகுதியை அமைக்க வேண்டும். நான்காவதாக, ஆரம்ப சங்கங்களிலும், மத்தியவங்கிகளிலும் மேலாளர்தொகுதிக்குத் தகுதிவாய்ந்த ஊழியர்களைத் தயார் செய்வது அவசியமானது.

**கூட்டுறவுக் கடன் நிறுவனங்களில் வங்கி முறை**

கூட்டுறவுக் கடன் நிறுவனங்களின் வங்கிக் கடன் முறை முன்னேற வேண்டியது அவைகளின் இன்றைய அவசரத் தேவையாகும். கூட்டுறவுக் கடன் நிருவாகம் சிறந்து இயங்க இது மிகமிக அவசியம். போதிய வைப்பு நிதி ஆதாரங்கள் இன்மையின் காரணமாக, கூட்டுறவு கடன் நிறுவனங்கள் அவதிக்குள்ளாகின்றன;

நாட்டிலுள்ள மாநில, மத்திய கூட்டுறவு நிறுவனங்களின் கடன் மூலதனத்தில் டிபாசிட்டுகள் 40 சத விகிதத்தை எட்டுவது அரிதாக உள்ளது. ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களில் அவற்றின் கடன் மூலதனத்தில் 7 சத விகித அளவுக்கு மிகவும் குறைவானதாகவே அவற்றின் வைப்பு நிதிகள் இருந்து வருகின்றன. மாநில மத்திய கூட்டுறவு வங்கிகளில்உள்ள வைப்பு நிதிக்கு அனேகமாக இரு மடங்கு வரை அவை வழங்கிய கடன்களில் நிலுவை உள்ளது. ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களில் அவைகளின் வைப்பு நிதிக்கு 10 மடங்கு வரை கடன் நிலுவை உள்ளது என்பதாக உத்தேசமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த விஷயத்தில் வியாபார வங்கிகள் புரிந்துள்ள சாதனைகளிலிருந்து கூட்டுறவு நிறுவனங்கள் அறிந்துகொள்ள வேண்டியவைகள் நிறைய உள்ளன. வளமான வைப்புநிதி வசதியில்லாமல் வியாபார வங்கிகள் நன்கு இயங்கமுடியாது. ஆகையால், வைப்பு நிதி செய்யும் விஷயமாக வியாபார வங்கிகள் சிறந்த கவனம் செலுத்தி வருகின்றன. நமது கூட்டுறவு நிறுவனங்களில் வைப்பு நிதி மூலாதார வசதி மேம்பாடுகாண வேண்டுமானால், இதுபற்றி இந்த நிறுவனங்களின் தோற்றத்தில் தீவிரமான மாறுதல்கள் காணவேண்டியது அவசியமாகும்.

தற்போதைய நிலையில் கூட்டுறவுச்சங்கத்தைக் கடன் வழங்கும் அமைப்பாகத்தான் பொதுமக்கள் கருதுகிறார்கள். பொதுமக்களிடமிருந்து வைப்பு நிதிகளைப் பெரிதும் கவரும் நிலையங்களாகக் கூட்டுறவு நிறுவனங்கள் இயங்கிவருவது வெகு சொற்பமே. நல்ல நிதி வசதி படைத்து சிறப்பாக இயங்கும் நிறுவனங்களாக விளங்கி பொது மக்களின் செல்வாக்கைப் பெற்றால் தான் கூட்டுறவு நிறுவனங்கள் மக்களின்வைப்பு நிதிகளைப் பெருமளவில் பெற முடியும். இதற்கு தீவிர பிரசாரம் தேவை. நமது கூட்டுறவு வங்கிகள் சிறந்து இயங்கவல்ல நிறுவனங்கள் எனவும், காசோலை வசூலிப்பது, டிராப்டுகள் வழங்குவது பணமாற்று வசதிகளைச் செய்வது போன்ற வங்கி நடவடிக்கைகளைச் சிறப்புறச் செய்ய வல்லவைகள் எனவும் பொதுமக்களிடையே எண்ணம் வளரச் செய்யும் வகையில் தொடர்ந்து பிரசாரமும் விளம்பரமும் இருந்து வரவேண்டும். சமீபகாலத்தில் நமது மாநிலத்தில்வைப்பு நிதிகள் சேகரிப்பதில் கூட்டுறவுத் துறையில் தீவிரமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் ஆரம்ப சங்கங்கள், மத்திய வங்கிகள், மாநில வங்கி ஆகிய நிறுவனங்கள் 1966ம் ஆண்டில் பெற்றிருந்த மொத்த வைப்பு நிதிகள் ரூ. 31·88 கோடியாகும். 1973ல் இந்தத் தொகை ரூ. 84·80 கோடியாக உயர்ந்தது. இதில் இரட்டிப்புக் கணக்கு ஏற்படுவதை நீக்கி விட்டாலும் – அதாவது ஆரம்ப சங்கங்கள் மத்திய வங்கியில் போட்ட தொகையை மத்திய வங்கிகள் மாநில வங்கியிலும் போட்டிருப்பதைத் தள்ளி விட்டுப் பார்த்தாலும்இந்த வகையில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால், இதிலிருந்து கிராமப்புறங்களில் மக்களிடம் உள்ள உபரித் தொகை அனைத்தையும் கூட்டுறவு நிறுவனங்கள் திரட்ட முடிந்ததாக நாம் குறிப்பிட முடியாது. கடந்த பத்துப் பதினைந்து ஆண்டுகளாக நமது மாநிலத்தில் ஏற்பட்டிருந்த பசுமைப்புரட்சியின் பயனுகக் கிராமங்கள் பெருமளவில் செழிப்படைந்து கிராம மக்களிடையே அதிக அளவில் உபரிநிதிகள் சேர்ந்துள்ளன. அந் நிதிகளைத் திரட்டுவதில் நம் கூட்டுறவுக்கடன் நிறுவனங்கள் தனி முயற்சியினை மேற்கொள்ள வேண்டும். தங்கள் உயர் மட்ட கடன் நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் கடன் வசதியையே நம்பியிருக்காமல் சொந்தமாகச் சேகரிக்கும் நிதியை நம்பியிருப்பது தான் அவைகளின் கடன் நிருவாக முறை சிறந்து இயங்க வழியேற்படும்.



**வியாபார வங்கிகளும் கூட்டுறவும்**

விவசாயக் கடன் லேவாதேவித்துறையில் வியாபார வங்கிகள் சமீப ஆண்டுகளாக ஈடுபட்டு வருவதன் மூலம் கூட்டுறவுக் கடன் நிருவாகத்தில் அதிக சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. விவசாயக் கடன் துறையில் வியாபார வங்கிகள் வகிக்கும் பங்கு என்ன என்பது பற்றி குழப்பமான கருத்துக்களும், நிச்சயமற்ற கொள்கைகளும் நிலவுகின்றன. விவசாய லேவாதேவியைப் பொறுத்தமட்டில், கூட்டுறவு வங்கிகளும், ஆரம்ப நாணய சங்கங்களும்தான் பிரதான முகவர்களாக

இருந்து வரவேண்டும் என்பது இந்திய அரசு ஏற்கெனவே வகுத்துள்ள தேசியக் கொள்கையாகும். ஆனால் அதே சமயத்தில், வியாபார வங்கிகள் விவசாய லேவாதேவித் துறைக்கு உதவும் துணை நிறுவனங்களாக விளங்க வேண்டும் என்பதையும் அரசு வலியுறுத்தியுள்ளது. ஆகையால் வியாபார வங்கிகளின் இந்த உதவியானது, எங்கெங்கு கூட்டுறவு நிறுவனங்கள் இல்லையோ அல்லது அவைகள் சரியானபடி இயங்காமலோ அல்லது வலுவடையாமலோ இருக்கின்றனவோ அங்குதான் தேவைப்படும் என்பது இதிலிருந்து புலனாகிறது.

கூட்டுறவுத் துறை நன்கு வளர்ச்சியடைந்துள்ள தமிழ் நாட்டைப் போன்ற மாநிலங்களைப் பொறுத்து வியாபார வங்கிகளின் தலையீட்டுக்கு அவசியம் ஏதும் எழவில்லை. ஆனால், வியாபார வங்கிகளின் சமீபகால நடவடிக்கைகளைக் கவனிக்குமிடத்து, இந்திய அரசு இதுபற்றி நிர்ணயித்த கொள்கைக்குப் புறம்பாக அவைகள் இயங்கியுள்ளன என்பது தெரியவரும். கூட்டுறவுத்துறை நன்கு வளர்ந்துள்ள பகுதிகளில்தான் விவசாய லேவாதேவியில் வியாபார வங்கிகள் தங்களைப் பெரிதும் ஈடுபடுத்தி வருகின்றன. 1968ம் ஆண்டிலிருந்து 1972ம் ஆண்டு வரையில் உள்ள காலத்தில் விவசாயக்கடன் துறையில் ஏற்பட்ட மொத்த லேவாதேவி உயர்வில் 51 சதமான அளவு தொகையானது கூட்டுறவுத்துறை முன்னேறியுள்ள தமிழ்நாடு, ஆந்திரம், குஜராத், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் வியாபார வங்கிகளால் வழங்கப்பட்டிருந்தன. மாறாக, நாட்டின் மொத்த விவசாய மக்கள் தொகையிலும், மொத்த விளைநிலத்திலும் 28 சத விகிதமாக இருந்துவரும் அஸ்ஸாம், பீகார், ஒரிஸ்ஸா, ராஜஸ்தானம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலும் அதே காலத்தில் ஏற்பட்ட விவசாயக் கடன் லேவாதேவி உயர்வில் 9 சத விகிதத்தையே வியாபார வங்கிகள் வழங்கியிருந்தன. இம் மாநிலங்கள் ஐந்தும் கூட்டுறவுத் துறையில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் மிகவும் பலவீனமானவைகள். (ஆதாரம் இந்திய ரிசர்வ் வங்கி புல்லட்டின் ஆகஸ்ட் 1973). எனவே, வியாபார வங்கிகள் கூட்டுற



வுத் துறைக்குத் துணைநிற்க வேண்டும் என்னும் கொள்கை புறக்கணிக்கப்பட்டு, சில குறிப்பிட்ட பகுதிகளில் அவற்றின் நீண்டகால நலனுக்கு விரோதமாக வியாபார வங்கிகள் கூட்டுறவு நிறுவனங்களுடன் போட்டியாகச் செயற்பட்டுள்ளன. தங்கள் விருப்பத்துக்கு விடப்பட்டிருந்தால், வியாபார வங்கிகள் விவசாய லேவாதேவித் துறையையே கவனிக்காமல் விட்டிருக்கும். 1968ம் ஆண்டுக்கு முன் இந்த வங்கிகள் விவசாய லேவாதேவித் துறையில் கவனத்தைச் செலுத்தவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அவ்வாறு இருக்குமாறு இந்த வங்கிகளை யாரும் வற்புறுத்தவில்லை. விவசாய லேவாதேவித் துறையிலிருந்து அவைகள் தூர விலகியிருந்தன என்றால் அதற்குக் காரணம் இல்லாமலில்லை. விவசாய லேவாதேவியானது லாபகரமான தொழில் அல்ல; தனிநபர் பிணையின் பேரில் வழங்கப்பெறும் விவசாயக் கடன்கள் அவைகளுக்கு விரும்பத் தக்கவைகளாக இல்லை. பூமி அடமானத்தின் பேரில் கடன் வழங்குவதும் ஆபத்தானதாகக் கருதப்பட்டது. ஏனெனில் விவசாய லேவாதேவி முறையில் நெருங்கிய தொடர்ந்தமேற்பார்வை இன்றியமையாததாகும். விவசாயி விடயத்திலும் அவன் தொழில் குறித்தும் கடன் கொடுப்பவர் நன்கு விஷயங்களைத் தெரிந்திருக்க வேண்டும். இந்த நுண்ணறிவு வியாபார வங்கிகளிடம் இருக்கவில்லை. வியாபார வங்கிகள் விவசாயக் கடன் லேவாதேவியை ஒதுக்கிவிட இவைதான் காரணங்களாயிருந்தன. இன்றும் இந்தக் காரணங்கள் அவைகளுக்குப் பொருந்தும். ஆனால் சமூகக் கட்டுப்பாட்டுத் திட்டம் நம் நாட்டில் அமுலாக்கப்பட்டு அதன் விளைவாகப் பெரிய ஷெட்யூல் வியாபார வங்கிகள் ஈடுபடவேண்டும் என்னும் கொள்கையை இந்திய அரசு நிர்ணயித்தது. அதைப் பின்பற்றி தேசிய வங்கிகளும், இதர ஷெட்யூல் வங்கிகளும் சமூகக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளப் போட்டியிட்டுக் கொண்டு முன்வர ஆரம்பித்தன.

(தொடரும்)

# தென்கிழக்காசியாவில் மகளிர் கூட்டுறவுச் செயற்பாடுகள்

ம. அ. பிரகாசராசா

தென் கிழக்காசியாவிலுள்ள பெண்கள் 19ம் நூற்றாண்டு வரை கூட்டுறவு இயக்கம் போன்ற சமூக சேவையில் ஈடுபடமுடியாமலும், அரசியலில் வாக்குரிமையற்றவர்களாகவும் சமூகக் கட்டுப்பாடென்ற நான்கு சுவர்களுள் அடக்கியொடுக்கிவைக்கப்பட்டிருந்தார்கள். இங்கிலாந்து, அமெரிக்காவிலுள்ள பெண்கள் வாக்குரிமைக்காகப் போராடி வெற்றி பெற்றதும், மேல் நாட்டுக் கல்வி முறை தென்கிழக்காசியாவில் பரவியதும், பெண்கள் விடுதலைக்கு சீர்திருத்தச் செம்மல்கள் ஆற்றிய தொண்டுகளும் பெண்களுக்கு இழைக்கப்படும் சமூக அநீதி பற்றி புரட்சிக்கவிஞர்கள் தீட்டிய காவியங்களும், விசேடமாகப் புதுமைப் பெண்ணைப் படைத்த பாரதியின்

'மாதர் தம்மை
இழிவு செய்யும்
மடமையைக்
கொளுத்திடுவோம்'

என்ற ஆர்ப்பரிப்பும் தமது உரிமைகளைப் பாதிக்கும் சமூக அநீதிகளை ஒழிக்க வேண்டுமென்ற விழிப்பை பெண்களுக்கு ஏற்படுத்தி போராடி அதனால் அவர்கள் ஓரளவு வெற்றியும் அடைந்துள்ளார்கள்.

தென் கிழக்காசியாவிலுள்ள மகளிர் கூட்டுறவு இயக்கத்தின் தொழிற்பாட்டை நோக்குமிடத்து பெண்கள் தங்கள் வீடு, குடும்பம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு உருவாக்கும் சொந்த விசேட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தமக்கென பிரத்தியேகமான மகளிர் கூட்டுறவுச் சங்கங்களையோ, மகளிர் தாபனங்களையோ அமைக்க விரும்புகிறார்கள். இதற்குக் காரணம் பெண்கள் சமூக சேவையிலீடுபடுவதற்கு முன்பு இருந்து வந்த பழைமையான தடைகள் தகர்த்தெறியப்பட்ட பொழுதும், நீண்டகாலம் அளப்பரிய சேவை செய்யும் கூட்டுறவுத் தாபனங்களில் வருடக் கணக்காக உழைத்த அநுபவங்களினாலும், அதனால் பெற்ற அறிவினாலும் ஆண்கள் சிறப்பாக தொடர்ந்து வகித்து வந்த தலைமைப் பதவிகளையும் ஏனைய உயர்ந்த பதவிகளையும் பொறுப்பேற்க பெண்கள் தயங்குகிறார்கள்.

விசேடமாக மாதாந்த ஊதிய வருமானத்தில் சிக்கனமாகச் செலவுகளைச் செய்துவரும் நடுத்தரவர்க்க இல்லத்தரசிகள் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவால் குடும்ப வரவு செலவை ஈடுசெய்ய முடியாமல் திண்டாடுகிறார்கள். அண்மைக் காலத்தில் கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபட்டு அக்கறையுடன்



கருமமாற்றுவதற்கு இதுவே பிரதான காரணியாக விளங்குகிறது. தரமான வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதற்காக இங்கு அதிகமான பெண்கள் கூட்டுறவுச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகிறார்கள் என்றால் மிகையாகாது.

இல்லத்தரசிகளின் விருப்புக்கள் பெரும்பாலும் எல்லாத் தேசங்களிலும் ஒத்தவையாக இருந்தாலும் அவர்களின் பிரச்சினைகளுக்கும் விருப்புகளுக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவம் நாட்டுக்கு நாடு சமுதாயத்திற்கு சமுதாயம் வேறுபடுகின்றது. இதன் பிரகாரம் பெண்கள் குழுக்கள் செயற்திறன்களும் வித்தியாசப்படுகின்றன.

**யப்பான் :**

யப்பான் கிராமிய விவசாயிகளில் 99 வீதமானவர் ஆரம்ப விவசாய கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்புரிமை வகிக்கிறார்கள். வேறு வார்த்தையில் கூறுவதானால் யப்பானிலுள்ள சகல விவசாயக் குடும்பங்களும் கூட்டுறவு இயக்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளன. சிறிய கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றாக இணைத்ததின் பேறாக யப்பானில் உள்ள ஆரம்ப விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் இப்பொழுது ப. நோ. கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கை ஒத்திருக்கின்றன.

பெண்கள் ஆரம்ப விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்புரிமை வகிக்கவில்லை. அதனால் விவசாயத்துறைக்குள் உட்பட்ட சங்கங்களைப் பெண்கள் உருவாக்கியிருக்கிறார்கள். 1968 ல் இச் சங்கங்களின் உறுப்புரிமைத் தொகை 2,900,000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் பெண் குழுவினர் 47 தலைமைச் சங்கங்களாக இணைந்து தேசிய சங்கத்துடன் ஒன்றிணைந்துள்ளனர். இச் சங்கங்கள் யப்பானிய பெண்களுக்கு ஊட்டச் சத்து, மனையியல், குடும்ப நலத்திட்டம், பிள்ளைகள் பராமரிப்பு போன்றவற்றில் அறிவூட்டி விவசாயக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் விவசாயச் சங்கங்களுக்கு உதவி புரிந்து வருகின்றன. இத்துடன் நின்று விடாது இல்லத்தரசிகளுக்கு வேளாண்மை முகாமையியலும், நவீன வேளாண்மை தொழில் நுட்பவியலிலும் பயிற்சியளித்து வருகின்றன. யப்பானிய பெண்கள் இல்லத்தை நடத்துவது மாத்திரமில்லாமல் தங்கள் குடும்பப் பண்ணைகளையும் நிருவாகித்து வருவதால் இப்பயிற்சி முக்கியமாகக் கருதப்படுகிறது. ''இல்லத்தின் ஒளி'' ''(Ie-No-Hikari)'' என்ற கூட்டுறவு வெளியீட்டு சங்கம் யப்பானிய பண்ணை இல்லத்தரசிகளுக்கு அவசியமான விசேட அக்கறையுடைய விடயங்களையும், கட்டுரைகளையும் பதிப்பித்து விநியோகிப்பதுடன் ஊட்டச்சத்து உணவுவகைகளைத் தயாரிக்கும் நிபுணர்களை யப்பானிய கிராமங்களுக்கு அனுப்பி மனையியலில் குறைந்த செலவு, ஊட்ட சத்து உணவு வகைகளைத் தயாரிக்கும் விதத்தை செயல்முறை, பாட மூலம் பெண்களுக்குப் போதிக்கிறது.

கடற்றொழில் துறையில் பெண் குழுக்கள் யப்பானிய கரையோரப் பகுதி பெண்களின் வாழ்க்கைத்தரத்தை திருத்தும்

வகையில் பணி புரிந்துவருகிறது. கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர் கல்வித்திட்டங்களிலும் சிக்கன கடனுதவு இயக்கங்களிலும் பெண்கள் ஈடுபட்டு உழைக்கிறார்கள்.

யப்பானிய நுகர்ச்சித்துறையில் நுகர்ச்சியாளர்களைப் பாதுகாப்பதே பெண்கள் குழுக்களின் முக்கிய நோக்கமாயிருக்கிறது. பாவனைப் பொருள்களின் விலை உயர்வுக்கெதிராகப் பிரசாரம் செய்வதுடன், விலை, குடும்ப வரவு செலவு சமனான ஊட்டச்சத்துணவு, உணவுப் பரிசோதனை போன்ற விடயங்களைத் துருவி ஆராய்ந்து உயர்ந்த வாழ்க்கைத்தரத்தை அடைவதற்கேற்ற விதமாக நுகர்ச்சியாளர் இயக்கத்தை ஆதரித்து வருகிறது. இவ்விடயங்கள் பற்றி மாதர்குழு சேகரிக்கும் புள்ளி விபரங்கள் யப்பான் அரசுக்கு நுகர்ச்சியாளர் விடயங்கள் பற்றி எடுக்கப்படும் முடிவுகளுக்கு முக்கிய உதவியாக இருக்கிறது.

இவ்விதமான பெண் பாவனையாளர் குழுக்கள் ஸ்ரீலங்காவிலும் கருமமாற்றினால் அரசினரின் உணவுப் பங்கீட்டுத் திட்டத்தின் முழுப்பயனையும் இலங்கையிலுள்ள சகல பிரசைகளும் பெறக்கூடியதாக விருக்கும். அத்தியாவசியப் பொருட்கள் தனிப்பட்ட வியாபாரிகளின் கைகளுக்கு சேருவதையும், பொருட்கள் தட்டுப்பாடான காலங்களில் தனிப்பட்ட வியாபாரிகளும், கறுப்புச்சந்தைக்காரர்களும் செயற்கைத் தட்டுப்பாட்டை உண்டாக்கி விலைகளை உயர்த்தி கொள்ளைலாபம் ஈட்டுவதை முறியடிப்பதற்கு அரசுக்கு பக்கபலமாக உதவ முடியும். பொருளாதார நெருக்கடியான காலங்களில் கொள்ளை லாபமடிக்கும் தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் கறுப்புச் சந்தைக்காரர்களுக்கும் எதிராகப் பிரசாரம் செய்து அவ்வித செயலில் ஈடுபடுபவர்களின் வியாபார தாபனங்களையும், நிலையங்களையும் மக்கள் பகிஷ்கரிப்புச் செய்து அவர்களின் தேசத்துரோகச் செயலை அம்பலப்படுத்தலாம்.

யப்பானில் பெண் பாவனையாளர்கள் (“Han”) ஹான் குழுக்களின் ஊடாகவே நடத்தப்படுகிறது. பத்து அல்லது பன்னிரண்டு இல்லத்தரசிகளைக் கொண்ட ஹான் குழுக்கள் குறிக்கப்பட்ட நுகர்ச்சியாளர் சங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (பெரிய நுகர்ச்சியாளர் சங்கங்கள் இவ்விதமான பல குழுக்களைக் கொண்டுள்ளன) 3000 உறுப்பினர் கொண்ட 172 ஹான் குழுக்கள் யப்பானில் 1971—1972 ல் செயற்பட்டு வந்தன. தேசிய மட்டத்திலுள்ள தேசிய மகளிர் மன்றம் யப்பானிய நுகர்ச்சியாளர் சமாசத்தின் விசேட குழுவாக இயங்குகிறது. யப்பானிய நுகர்ச்சியாளர் சமாசத்தின் தலைவர் தேசிய மகளிர் மன்ற பணிப்பாளர் சபை உறுப்பினர்.

யப்பானிலுள்ள சகல பெண்கள் கூட்டுறவுக் குழுக்களும் குடும்ப வரவு செலவிலும், சேமிப்பிலும் முக்கிய வற்புறுத்தல் செய்து இதற்கான விசேட கணக்கியல் புத்தகங்களையும் வைத்துள்ளன. கூட்டுறவு இயக்கத்தில் பல துறைகளிலுள்ள சங்கங்களின் முகாமைப்பணிப்



பாளர் சபைகளில் பெண்கள் குழுக்கள், அங்கம் வகிக்கின்றன. மேலும் பெண்கள் குழுக்கள் கிராமிய, நகரப்பகுதிமக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் விடயத்தில் ஏனைய முகவர் தாபனங்களுடன் இணைந்து செயலாற்றி வருகின்றன.

## இந்தியா :

இந்தியப் பெண்களுக்கு கூட்டுறவுக்கல்வித்திட்டத்தை நடாத்தவும், அவர்களின் பொருளாதார உயர்ச்சிக்காகவும் அபிவிருத்திக்காகவும் அவர்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் ஈடுபடுத்தவும் 1965—1966 ல் பல பெண்கள் அரசினர் கூட்டுறவுச் சமாசங்களில் சேவை செய்ய நியமிக்கப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்தே பல மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாகின.

தற்பொழுது 3,327 மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் இந்தியாவில் கருமமாற்றுகின்றன. இவற்றில் 1,138 கைத்தொழில் சங்கங்களாகும். இவை ஊறுகாய், பழப்பாணி, சட்ணி ஏனைய உணவுப் பொருட்கள் தயாரித்தல், வாசனைத் திரவியங்களைப் பொடியாக்கி, கலந்து பொதியாக்குதல் தையல், தையலால் பூவேலை, பின்னல் வேலை, பாவை செய்தல் முதலிய தொழில்களில் ஈடுபட்டு வருகின்றன. வேறு சில சங்கங்கள் அங்கத்தவர்களுக்குச் சேமிக்கும் பழக்கத்தை உண்டாக்குவதுடன் தொழில் புரியும் தாய்மாருடைய குழந்தைகளுக்காகவும், சிறுவர்களுக்காகவும் குழந்தைகள் பேணும் நிலையங்களையும், சிறுவர் பாடசாலைகளையும் நடத்தும் சமுக நலன் கருமங்களையும் செய்து வருகின்றன. சில சங்கங்கள் பெரிய தொழில் தாபனங்களின் குறிப்பிட்ட வேலைகளைச் செய்து கொடுக்கும் துணை நிலையமாக இயங்கி தொழில் தாபனங்கள் தயாரிக்கும் உற்பத்திப் பொருட்களை ஒன்றிணைக்கும் பணியை செய்து வருகின்றன. இச்சங்க உறுப்பினர்களுக்கு அவர்கள் செய்யும் துண்டு வேலை கணக்குப்படியே ஊதியம் கொடுக்கப்படுகிறது. மூலப் பொருட்கள், பணியாளர் பயிற்சி, ஏனைய செலவினங்கள் முதலியன தொழில் தாபனங்களின் பொறுப்பானதால் துணைச் சங்கங்கள் இவ்வித பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டாததால் மிகத் திறமையாகச் செயற்பட்டு வருகின்றன.

இந்திய மகளிர் கூட்டுறவுச் சங்க செயற்பாட்டில் பம்பாய், கோவா மகளிர் கூட்டுறவு வங்கிகள் தனிச்சிறப்பிடம் வகிக்கின்றன. இவ்விரு வங்கிகளில் பணியாற்றும் பணியாளர்களும் உறுப்பினர்களும் பிரத்தியேகமாக பெண்களாகும். இரு வங்கிகளும் உறுப்பினர்களைக் கடன் பழுவிலிருந்து காற்பாற்றும் முக்கிய நோக்கத்திற்காகவும், சிறிய அளவான உற்பத்திப் பொருட்களைத் தயாரித்து விற்பனை செய்வதன் மூலம் குடும்ப வருமானத்தை ஒன்றிணைத்து நிறைவாக்கல் செய்யவும் உறுப்பினர்களுக்கு கடனுதவி அளிக்கிறது.

பம்பாயில் சில்லறை மீன் விற்பனைத் தொழில் செய்யும் மீனவப் பெண்கள், மீனவப் பெண்கள் கூட்டுறவுச் சங்கமொன்றை ஆரம்பித்திருக்கிறார்கள். நாளாந்த பிடிபாடு முழுவதையும் மொத்தமாக கொள்

வனவு செய்து சில்லறையாக விற்பனை செய்யும் மீனவப் பெண்களுக்கு விற்று அதிக வருவாய் ஈட்டிவரும் நடுவர்களை ஒழிப்பதே இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். மீன்கள் பழுதடையாமல் பாதுகாக்க குளிர்பதன சேமம் ஒன்றை அமைக்க இக்கூட்டுறவுச் சங்கம் திட்டமிட்டு வருகிறது.

குஜராத் மாநிலத்திலுள்ள கெய்ரா மாவட்டத்தில் செயற்பட்டு வரும் அமுல் கூட்டுறவுப் பாற்பண்ணைச் சங்கம் பிரபல்யமானதாகும். இப்பாற்பண்ணையுடன் மகளிர் பாற்சங்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. பாற் சங்கங்கள் கால் நடைகளை வளர்த்து பால் கறந்து, கறந்த பாலை பால் சேகரிக்கும் நிலையங்களிடம் ஒப்படைக்கின்றன. பால் நிலையங்கள் பெறும் பாலை அளந்து பரிசோதனை செய்து அதற்கான பணத்தைக் கொடுக்கின்றன.

இந்தியாவில் சில சிறிய மகளிர் பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. சில நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களில் குறைந்த அளவான பெண்கள் உறவினராகவிருக்கின்றனர். போதிய நிதியும், வியாபார நுட்பமும் இல்லாமையே இந்தியப் பெண்கள் பாவனையாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிக்க முடியாமலிருக்கிறார்கள். ஆனால் அண்மைக் காலத்தில் குடும்பப் பெண்கள் கொள்வனவுக் குழுக்களை அமைப்பதில் அக்கறை காட்டி வருகிறார்கள்.

(வளரும்)

ஆதரம்: I. C. A. Journal

## பத்திரங்கள் விற்பனை

கீழ்க்காணும் கூட்டுறவுக் கடனுதவு சங்கங்களுக்கான (ஐ. நா. ச.) பத்திரங்களை, தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ் கிளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| கடன்மனுப்பத்திரம் | –10 சதம் |
| கடன்முறிப் பத்திரம் | –10 ,, |
| கேள்விப் பத்திரம் | –10 ,, |
| மத்தியஸ்த மனு | –10 ,, |

# பெரிய ஆரம்ப ப. நோ. கூ. சங்கங்களின் மாதிரி நடைமுறைப் பிரமாணங்கள்

சங்கத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், பொதுமுகாமையாளரே ஆகும். நெறியாளர் குழுவின் அங்கீகாரத்தினைப் பெறவேண்டிய விடயங்களைத்தவிர சங்கத்தின் கொடுக்கல் வாங்கல்களைக் குறித்து செம்மையான முடிவுகள் யாவற்றையும் எடுப்பதற்கு இவரே பொறுப்புள்ளவராவர்.

சங்கத்தினைச் செயற்திறன் படவும், நட்டங்கள் ஏற்படாமலும் நடாத்துவதற்கு தேவையான ஆணைகளை பணியாளர்களுக்கு அவர் பிறப்பித்தல் வேண்டும்.

**சங்கத்தின் வேலையாள் கோப்பு**

(அ) கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்டம் பகுதி 29 (1) சட்ட மூலத்தின்படி நிர்ணயிக்கப்பட்ட வேலையாள் கோப்பிற்கு ஏற்ப நெறியாளர் குழு நிரந்தர ஊழியர் ஆட்சேர்ப்பினைச் செய்தல் வேண்டும்.

(ஆ) நிரந்தரப் பதவிகளுக்குப் பணியாளர்களைச் சேர்ப்பதிலும், பதவி ஏற்றுவதிலும் நெறியாளர்குழு மே மாதம் 12ம் திகதி 1972ம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானி இல. 15009/12 ‘பி’ யின் படியும் கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகள் 13, 14, 15, 16 க்கு ஏற்ப அமைதல் வேண்டும்.

(இ) பொதுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செலவினங்களுக்கு அமைவாக தற்காலிக சமயோசித பணியாளரை நியமிக்கும் பொழுது நெறியாளர் குழு இத்தகைய வெற்றிடங்களுக்கு கூட்டுறவுப் வேலையாளர் ஆணைக்குழு விதித்ததின்படி உள்ளூர் பத்திரி

ளை ஒன்றில் விளம்பரம் ஒன்றினை பிரசுரித்தல்வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றதும் சங்கம் தேர்வினை நடாத்தலாம்.

(ஈ) கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு விதிகள் 10.1ன்படி காரணம் எதுவும் கொடுக்காது தகைமைகாண் கால எல்லையில் பணியாளர் எவரினதும் சேவைகளை நிறுத்துவதற்கு நெறியாளர் குழுவிற்கு அதிகாரமுண்டு. விதி10.1ன் படி நிர்ணயிக்கப்பட்ட தகைமைகாண் கால எல்லையில் பணியாளர் எவரினதும் நியமனம் நிறுத்தப்பட்டிருக்காவிட்டால் தகைமைகாண் கால எல்லை முடிந்ததும் நெறியாளர் குழு அந்நியமனத்தை உடனடியாக உறுதிப்படுத்தல் வேண்டும். கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு விதி 10(3)ன்படி இத்தகைய பணியாளர் நியமனத் திகதி நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

**சங்கத்தின் அலுவலகம்**

உபவிதி 2ன் படி கூறப்பட்டதிற்கேற்ப சங்கத்தின் அலுவலகம் நிறுவப்படல் வேண்டும். ஏதேனும் முகவரி மாற்றம் நெறியாளர் குழுவின் தீர்மானத்தினால் செய்யப்படுவதுடன் அத்தகைய மாற்றம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கும், திணைக்களங்களுக்கும் அறிவிக்கப்படல் வேண்டும்.

**சங்கத்தின் முயற்சிகளும் வெவ்வேறு துறைகளும்**

சங்கத்தின் வெவ்வேறு துறைகளும் முயற்சிகளும்.

(1) மாவட்ட அபிவிருத்தித் திட்டங்கள்.
(2) ஒப்பந்த வேலைகள்.
(3) பீடி உற்பத்தி செய்தல்
(4) சேட் உற்பத்திசெய்தல்
(5) பெற்றோலியப் பொருட்களின் விற்பனை.
(6) உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட கடகங்களை கொள்வனவு செய்துசந்தைப்படுத்துதல்
(7) பாவனையாளர் முயற்சிகள்.

**வேலை நேரம்**

திங்கட்கிழமை -- வெள்ளிக்கிழமை: மு.ப. 8 — 12.30
பி.ப.1.30—5.00
சனிக்கிழமை
மு.ப. 8 மணி—1மணி
ஞாயிற்றுக்கிழமை
விடுமுறை

காவலாளர்களுக்கும் வெளிக்கள அலுவலர்களுக்கும் வேலை நேரம் 12 மணித்தியாலங்களாய் இருத்தல் வேண்டும்.



நெறியாளர்குழுவினது அல்லது தலைவரினது அல்லது அரசாங்கத்தினது தூண்டுரைக்கேற்ப விசேட காரணங்களுக்காக பொது முகாமையாளர் மேற்குறிப்பிட்ட வேலை நேரங்களையும் நாட்களையும் மாற்றலாம்.

வேலை நேரத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்படுங்கால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட விநியோக நிலையம் மூடப்படுங்கால் முன் கூட்டியே மாவட்ட உணவு அதிகாரிக்கும், கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளருக்கும் அறிவித்தல் கொடுக்கப்படல்வேண்டும்.

**பொது விடுமுறை**

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு விதி 58ல் பிரகடனப்படுத்தப்பட்டவாறு எல்லாப் போயா நாட்களிலும், வேறு பொது விடுமுறைநாட்களிலும் ஒவ்வொரு பணியாளரும் முழு ஊதியத்துடன் விடுமுறை பெறுவதற்குஉரித்தானவர்.

**வார விடுமுறை**

வேலையாளர் ஆணைக்குழுவினால் நியமனங்கள் அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பணியாளர் மட்டுமே விதி 56க்கு அமைவாக வார விடுமுறைகளுக்கு உரித்தானவர்கள்.

$5\frac{1}{2}$நாட்களுக்கு தொடர்ச்சியாக வேலை செய்தால் மட்டுமே சமயோசித தற்காலிக பணியாளர் $1\frac{1}{2}$ நாள் வார விடுமுறைக்கு உரித்தாவர்.

**வருடாந்த ஓய்வும் உரிமை ஓய்வும்**

ஓய்வு தேவைப்படும் சகல பணியாளர்களும் தமது ஓய்வு தொடங்குவதற்குக் குறைந்தது 48 மணித்தியாலங்களுக்கு முன்னராவது பொது முகாமையாளருக் விண்ணப்பித்து ஓய்வினைப் பயன்படுத்துமுன் அங்கீகாரத்தினைப் பெறல் வேண்டும்.

மூன்று அல்லதுஅதற்கு மேற்பட்ட சுகயீன ஓய்விற்கான விண்ணப்பம் அரசாங்க, மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின்மருத்துவச் சான்றிதழ்களினால் ஆதாரப் படுத்தப்படல் வேண்டும்.

**ஓய்வு வழங்குவதற்கான அதிகாரம்**

பொது முகாமையாளருக்கு ஓய்வு வழங்கும் அதிகாரம் தலைவருக்கே உண்டு. ஏனைய பணியாளர்களின் ஓய்வு விண்ணப்பங்கள் யாவும் பொது முகாமையாளரினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும். எல்லாப் பணியாளரது ஓய்வு விண்ணப்

பங்களும் முறையே அவ்வத்துறை தலைவர்களின் மூலமும், அவர்களுடைய தகவுரைகள் மூலமும், சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஓய்விற்கு விண்ணப்பிக்கும் எல்லோரும் தாம் ஓய்வில் இருக்கும் காலத்தில் தமக்குப் பதிலாக வேலை செய்பவரின் பெயரினை எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும். சங்கத்தின் சொத்துக்கள், உடமைகள் ஆகியவற்றிற்குப் பொறுப்பான பணியாளர்கள் ஓய்வில் செல்லும்போது அவற்றிற்குப் பொறுப்பாக இருப்பர்.

பொது முகாமையாளர் ஓய்வில் செல்லும் பொழுது அவருக்குப் பதிலாக கடமையாற்றுவதற்கு பணியாளர்களில் நிறைவேற்றுத் துறையைச் சேர்ந்த ஒருவரை முன் கூட்டியே நெறியாளர் குழு நியமித்தல் வேண்டும்.

முன்கூட்டியே பதில்வேலை ஒழுங்குகளைச் செய்யாது யாராவது பணியாளர் ஓய்வு எடுக்குங்கால் அத்துறைக்குப் பொறுப்பாகவுள்ள தலைவர் பொதுமுகாமையாளரின் எழுத்துமூலமான பதில் வேலை ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

முன்கூட்டியே அங்கீகாரமின்றி வேலைக்கு வருகை தராதிருத்தல் இவ்விதிகளின்கீழ் தண்டனைக்குரித்தானது. ஓய்வு எல்லாவற்றையும் முடித்துவிட்ட ஒரு பணியாளருக்கு மருத்துவ காரணங்களுக்காக மூன்று மாதங்களுக்கு மேற்படாத சம்பளமின்றிய ஓய்வினை நெறியாளர் குழு வழங்கலாம். இத்தகைய பணியாளரின் விண்ணப்பம் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின், மருத்துவ சான்றிதழினால் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

முன் கூட்டிய அங்கீகாரமின்றி அல்லது நியாயமான காரணம் காட்டாது தொடர்ந்து மூன்று நாட்களுக்கு வேலைக்கு வருகை தராதிருக்கும் பணியாளருக்கு எதிராக கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்டம் இல. 116ன் படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

**பிள்ளைப் பேறு ஓய்வு**

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சட்டம் இல. 60ன் படி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(வளரும்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் நடாத்திய கூட்டுறவுத் தினவிழாப் போட்டி முடிவுகள்

**சிறந்த தொழிலகப் பணியாளர்**

1. சி. இராசேந்திரன்
2. சே. தர்மரட்ண
3. இ. கருணனந்தன்

**சிறந்த தொழிலகப் பயிற்சியாளர்**

1. அ. தேவராசா

**5 மைல் மரதன் ஓட்டப்போட்டி**

1. நா. கணேசலிங்கம்
2. ம. சுந்தரலிங்கம்
3. நா. இராசதுரை
4. அ. சி. கணேஸ்வரன்
5. மா. இராசரத்தினம்
6. மு. கதிர்காமசாமி
7. மு. செல்வராசா
8. செ. கோகுலராசா
9. ஜெ. ஜயபாலன்

**25 மைல் சயிக்கில் ஓட்டப்போட்டி**

1. ஐ. செல்வராசா
2. வை. கயிலைநாதன்
3. க. செல்வராசா
4. சி. நல்லசேகரம்
5. ச. சுந்தரராசா
6. செ. நம்பியாரூரன்
7. யோ. பற்றிக்லூயிஸ்
8. பீற்றர் வில்லியம்

**பொதுவான சங்கீதக்கதிரைப் போட்டி (பெண்கள்)**

ந. சுகந்தினி
S. கலாவதி
S. லலிதா

### சிறுவர் பாடசாலை பேச்சுப்போட்டி

1. ப. பரசுதன்
2. நா. கண்ணர்
3. சி. மைதிலி

### சிறுவர் பாடசாலை பாட்டுப் போட்டி

1. சி. மைதிலி, மா. இராசா, ந. பவானி
2. க. உமாபுத்திரன், வ. தர்சினி, து. சத்தியா
3. எட்ணு பிரியதர்சினி, த. தர்மலட்சுமி இ. கீதாஞ்சலி

### சிறுவர் பாடசாலைக் கலை நிகழ்ச்சிப் போட்டி

1. 4 வது பாடசாலை
2. 2 வது பாடசாலை

### சிறுவர் பாடசாலை விநோத உடைப்போட்டி

1. லதாங்கி, இ. அனுஷ்ய
2. எ. சுதர்சினி
3. ச. சிறிகாந்தன்

### சிறந்த சிறுவர் பாடசாலை ஆசிரியை

செல்வி லோ. றேஸ்மேரி நேசம்

### பொது விநோத உடைப் போட்டி

1. பொ. மாவலிராஜன்
2. செ. பாஸ்கரன்
3. பிராங் அருள் ஜெய்சிங்

### சிறுவர் பாடசாலை சங்கீதக்கதிரைப்போட்டி

1. க. திலீபன்
2. ந. சந்திராதேவி
3. திரு. தி. திருச்செல்வம்

### ஆறுதல் பரிசுகள்

1. சி. மைதிலி
2. ந. சதீசன்
3. ந. லிங்கேஸ்வரி
4. வ. சத்தியவரதன்
5. க. பரசுதரன்
6. த. தர்மலட்சுமி
7. ந. சிவகரன்
8. சு. சுரேஷ்குமார்
9. வே. அறிவழகன்

## தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம் நடாத்திய சர்வதேச கூட்டுறவுத் தினவிழாப் போட்டி முடிவுகள்

**பேச்சுப் போட்டி — கனிஷ்ட பிரிவு, ஆண்கள்**
1 ம் இடம் : க. தங்கவேல்
மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை

**பேச்சுப் போட்டி — கனிஷ்ட பிரிவு, பெண்கள்**
1 ம் இடம் : க, கமலேஸ்வரி
மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை

**பேச்சுப் போட்டி — சிரேஷ்ட பிரிவு, பெண்கள்**
1 ம் இடம் : இ. சித்திரா
நாவற்குளி மகாவித்தியாலயம்

**தனிப்பாடல் — கனிஷ்ட பிரிவு, ஆண்கள்**
1 ம் இடம் : மு. பத்மநாதன்
மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை

**தனிப்பாடல் — கனிஷ்ட பிரிவு, பெண்கள்**
1 ம் இடம் : சி. விஜயகலா
குருசாமி வித்தியாசாலை

**தனிப்பாடல் — சிரேஷ்ட பிரிவு, பெண்கள்**
1 ம் இடம் : க. சிவகாமசுந்தரி
நாவற்குளி மகாவித்தியாலயம்

**கூட்டுப்பாடல் — கனிஷ்ட பிரிவு, ஆண்கள்**
1 ம் இடம் : மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலை

**கூட்டுப்பாடல் — கனிஷ்ட பிரிவு, பெண்கள்**
1 ம் இடம் : குருசாமி வித்தியாசாலை

**கூட்டுப்பாடல் — சிரேஷ்ட பிரிவு. பெண்கள்**
1 ம் இடம் : விக்னேஸ்வரா வித்தியாசாலை

# கூட்டுறவுச் செய்திகள்

### கூட்டுறவு அமைச்சர்

மாண்புமிகு T. B. இலங்கரத்தினாவின் பொறுப்பிலே முன்பு இயங்கி வந்த கூட்டுறவுத் திணைக்களம் இப்பொழுது திரு. S.K. சூரியாராய்ச்சிக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

### விவசாயக் கடன் பற்றி மகாநாடு

கால போகத்திற்கு விவசாயிகளுக்கு கடன் வழங்குவது பற்றி அண்மையில் யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர்கள் வீரசிங்கம் மண்டபத்தில் ஒரு மகாநாட்டை நடாத்தினர்.

### தெங்கு பனம்பொருள் குறித்து மகாநாடு

தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள் அண்மையில் ஒன்றுகூடி நடாத்திய மகாநாட்டில் தென்னை, பனை ஆகியவற்றிலிருந்து பெறும் மூலப் பொருள்களைக் கொண்டு எவ்வாறு மேலும் தொழிலபிவிருத்தியை எய்தலாம் என்பதுபற்றி பல்வேறு கோணங்களிலிருந்து கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டன.

### எண்பதாவது ஆண்டு நிறைவு விழா

அனைத்துலக கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் எண்பதாவது ஆண்டு விழா அண்மையில் டில்லியில் கொண்டாடப்பட்டது. இந்திய குடிப்பதி ஸ்ரீ வொக்கிறூடி அலி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இக் கொண்டாட்டத்திற்கு ஸ்ரீ R.G. திவாரி (இந்திய கூட்டுறவு ஒன்றியத் தலைவர்) தலைமை தாங்கினார். இணைப்பு நிறுவனத்தின் நெறியாளர் கலாநிதி S.K. சக்சேனாவும், தென்கிழக்காசியாவின் சபைத் தலைவருமான திரு. N. A. குலராசாவும் இக்கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

# வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்
# வீரசிங்கம் மண்டபம்

அரங்க அமைப்பு    ஆசன அமைப்பு
மின்னொளி அமைப்பு

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

## வாடகைக் கட்டணங்கள்

**நாடகம், நடனம்**

இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் .. 250-00

பகல் .. .. 200-00

**இசை நிகழ்ச்சிகள்**

இரவு .. .. 175-00

பகல் .. .. 150-00

**ஏனைய நிகழ்ச்சிகள்**

இரவு முதலாவது மணித்தியாலம் 100-00

(மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் 40-00

பகல் முதலாவது மணித்தியாலம் 75-00

(மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் 30-00

**திருமணம் - பகல் அல்லது இரவு**

முதல் 3 மணித்தியாலங்கள் 250-00

(மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் 50-00

**சினிமா** இரவு 150-00

பகல் 100-00

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்பட வேண்டும்.

தேசிய கூட்டுறவுச் சபை (யாழ் மாவட்டக்குழு)
12, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7238

Published by the Jaffna District Committee, National Co-operative Council of Sri Lanka Ltd., (formerly known as the Northern Div. Co-operative Federation, Ltd.), 12, K.K.S. Road, Jaffna and printed at the Jaffna Municipality & P.C.S. Printing Branch, the Co-op. Printers Ltd., Jaffna. (formerly Northern Province Co-operative Printing and Publishing Society Ltd.